# தமிழ்நாடு அரசு
## நெடுஞ்சாலைத் துறை
## கோயமுத்தூர் கோட்டம்

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 18,2006-2007,முவஅ,**
**நாள் 30.08.2006**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் ஆளுநர் அவர்களின் சார்பாகவும் கோயமுத்தூர் நெடுஞ்சாலைத்துறை, கோட்டப் பொறியாளர் அவர்களால் இத்துறையில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க்கண்ட பணிகளுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **27.09.2006** அன்று பிற்பகல் 3.00 மணிவரை (அலுவலக கடிகாரப்படி) கோயமுத்தூர் நெடுஞ்சாலை வளாகத்தில் அமைந்துள்ள கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் **27.09.2006** அன்று பிற்பகல் 3.15 மணிக்கு கோட்டப் பொறியாளர் அவர்களால் வருகைதந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அவர்தம் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வ. எண் | பணியின் பெயர் | உத்தேச மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்) | முன் வைப்புத் தொகை (ரூபாய்) | ஒப்பந்தக் காரர் தகுதி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| காலமுறை புதுப்பித்தல் திட்டம் 2006-07<br>அன்னூர் (நெ) உட்கோட்டம் - முதல் அழைப்பு | | | | |
| 1 | அவிநாசி மேட்டுப்பாளையம் சாலை கிமீ 16/2-17/4 வரை சிறப்பு பராமரிப்பு செய்தல் | 25.65 | 23000 | முதல் வகுப்பு |
| 2 | தென்னம்பாளையம் அன்னூர் சாலை (வழி) வாகராயம்பாளையம் கிமீ 9/0 –10/2, 15/2-18/0 வரை சிறப்பு பராமரிப்பு செய்தல் | 27.50 | 23750 | முதல் வகுப்பு |

….2

| வ. எண் | பணியின் பெயர் | உத்தேச மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) | முன் வைப்புத் தொகை (ரூபாய்) | ஒப்பந்தக் காரர் தகுதி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| **கோவை (நெ)உட்டே காட்டம் - முதல் அழைப்பு** | | | | |
| 3 | வடகோவை - இராமநாதபுரம் - செட்டிபாளையம் சாலை கிமீ 13/900 – 14/300 & 14/700 – 15/300 வரை சிறப்பு பராமரிப்பு செய்தல் | 28.50 | 24250/- | முதல் வகுப்பு |
| 4 | ராவத்தூர் சின்னியம்பாளையம் சாலை (வழி) அத்தப்பகவுண்டன் புதூர் கிமீ 8/0-9/6 வரை சிறப்பு பராமரிப்பு செய்தல் | 28.50 | 24250/- | முதல் வகுப்பு |
| 5 | கிமீ 8/8 துடியலூர் - சின்னதடாகம் சால முதல் எண். 4 வீரபாண்டி சாலை கிமீ 0/0-2/8 வரை சிறப்பு பராமரிப்பு செய்தல் | 25.65 | 23000/- | முதல் வகுப்பு |
| **நபார்டு திட்டம் -ஆர்.ஐடிஎ.்.ப் XI** | | | | |
| **கோவை (நெ) உட்கோட்டம் -முதல் அழைப்பு** | | | | |
| 6 | சேலம் - கொச்சின் சாலையில் கிமீ 152/0 ல் குறுகிய பாலம் அகலப்படுத்துதல் | 26.50 | 23250/- | முதல் வகுப்பு |
| **மேட்டுப்பாளையம் (நெ) உட்கோட்டம் -மூன்றாம் அழைப்பு** | | | | |
| 7 | அவிநாசி - மேட்டுப்பாளையம் சாலையில் கிமீ 34/10 –ல் பாலம் திரும்ப கட்டுதல் | 25.50 | 22750/- | முதல் வகுப்பு |

ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள், நிபந்தனைகள், வரைபடங்கள், முதலியன கோட்டப் பொறியாளர் (நெ) அலுவலகத்தில் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் குறிப்பிட்ட தொகையை இக்கோட்ட எல்லைக்குள் உள்ள கருவூலத்தில்செலுத்தி அதற்கான செல்லுச்சீட்டு அல்லது ஷெட்யூல்டு வங்கியிலிருந்து சம்பந்தப் பட்ட

கோட்டப்பொறியாளர் (நெ) கோவை அவர்களின் பதவியின் பெயரில் கீழ்க்கண்ட தொகைக்கு அதாவது ஒப்பந்தப்புள்ளி நமூனா விலை, விற்பனை வரி -மற்றும் சர்சார்ஜ் சேர்த்து பெறப்பட்ட கேட்பு வரைவுடன் (Demand Draft) **25.09.2006** வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரத்திற்குள் எழுத்து மூலம் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

| **நமூனா விலை** | கணக்குத்தலைப்பு |
|---|---|
| **ரூ.3000/-** | **8658 – 00120 – AE 030C -** |
| **(ஒவ்வொரு பணிக்கும் )** | **8658 Highways Suspense III O.R. to the Credit of Divisional Engineer (H) Coimbatore** |

*விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் -*

| | |
|---|---|
| ரூ. **378/-** | **0040 Sales 0040 – 0012 02 – 0104** |
| **(ஒவ்வொரு பணிக்கும் )** | |

ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் கோட்டப் பொறியாளர் (நெ) அலுவலகத்தில் உரிய கட்டணத்துடன் அஞ்சலக செலவு தொகையும் சேர்த்து செலுத்திய ஆவணங்களுடன் வேண்டுகோள் விடுவிக்கும் ஒப்பந்தகாரர்களுக்கு அவர்களுடைய முழு பொறுப்பில் அஞ்சல் அல்லது தனியார் விரைவு அஞ்சல் (Courier) மூலம் அனுப்பப்படும். இது தொடர்பாக காலதாமத்திற்கு இத்துறை பொறுப்பேற்காது.

ஒப்பந்தகாரர்கள் தங்களின் ஒப்பந்தப்புள்ளிகளை நேரிலோ (அ) தனியார் விரைவு அஞ்சல் மூலமாகவோ (அ) அஞ்சல் துறை விரைவு அஞ்சல் (அ) பதிவுத் தபாலிலோ (அ) சாதாரண தபாலிலோ கூடுதலாக ஒரு மூடி முத்திரையிட்ட உறையில் வைத்து விலாசமிட்டு ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலரின் கைகளில் **27.09.2006** பிற்பகல் 3.00 மணிக்குள் பெறத்தக்க வகையில் அனுப்ப அனுமதிக்கப் படுகிறார்கள்.

மேற்காணும் முறையில்அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் **27.09.2006** அன்று பிற்பகல் 3.00 மணிக்கு மேல் பெறப்பட்டால் அவை திறக்கப்படாமல் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமே திரும்ப வழங்கப்படும். தனியார் விரைவு அஞ்சல், அஞ்சல் துறை மற்றும்தனி நபர் மூலம் ஏற்படும் கால தாமத்திற்கு இத்துறை பொறுப்பேற்காது.

கோட்டப்பொறியாளர் (நெ) கோயமுத்தூர் அவர்களுக்கு எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்க முழு அதிகாரம் உண்டு.

ஒப்பந்தக்காரர்கள் இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்ளாமலோ அல்லது மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெற்று ஒப்பந்த அழைப்புகளில் கலந்து கொள்ளாமல் விட்டாலோ அவர்கள் பதிவு ரத்தாகும்.

வ. எண். 1,2,3,4 மற்றும் 5-ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு மைய சுடுகலவை இயந்திரம், பேவர் இயந்திரம் மற்றும் அதனை சார்ந்த உபகரணங்கள் அனைத்தும் சொந்தமாக வைத்திருப்பதற்கான ஆவணங்கள் அளித்தால் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி நமூனா வழங்கப்படும்.

வ. எண். 1,2,3, 4 மற்றும் 6-ல் குறிப்பிட்டுள்ளபடி பணிகளுக்கு மத்திய தரைவழி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை ஆணையம் நான்காவது திருத்தத்தின்படி (MORTH – IV) REVISION )செயலாக்கம் செய்யப்பட வேண்டும்.

கோட்டப் பொறியாளர் (நெ)
கோவை

பெறுநர்

பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் - சம்பந்தப்பட்ட உதவிக் கோட்டப் பொறியாளர்கள் மூலமாக

நகல் - அனைத்து உதவிக் கோட்டப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் (நெ)

நகல் - கண்காணிப்புப் பொறியாளர் (நெ) கோவை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல் - கோட்டப் பொறியாளர் (நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், தேசிய நெடுஞ்சாலை மற்றும் திட்டம் - 1 கோவை.

நகல் - கோட்டப் பொறியாளர் (நெ) மேஜைக்கு

நகல் - கோட்டக் கணக்கர். முநிவதொஅ, இவஅ 1 முதல் இவஅ 3 முடிய

நகல் - அறிவிப்புப் பலகை